| | |
|---|---|
| IN.DOP எண் | 31/2015 (Pw1) |
| நாள் | 21.04.2026 |
| பெயர் | லட்சுமி |
| கணவர் பெயர் | கோவிந்தராஜலு |
| வயது | 55 |

**3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

என்னுடைய கணவர் கோவிந்தராஜன் என்பவர் எனக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான். அது **எ மா சா 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னுடைய பிள்ளைகள் கல்லூரி படிப்பை படித்து முடித்தார்கள். கல்லூரி படிப்பிற்கு நான் கல்விகடன் எதுவும் வாங்கவில்லை. அவர்களாக பகுதி நேரத்தில் பணி செய்து அவர்களே படித்துக் கொண்டார்கள் என்ற சாட்சி தாமாக முன்வந்து சொல்கிறார். எனக்கு சொந்தமான Volkswagen கார் உள்ளது என்றால் சரியல்ல. தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதுவதற்கு தேவைப்படும் முத்திரைத்தாள் தீர்வுகளை யார் செலுத்தினார்கள் என்றால் என் சொந்தக்காரர்களிடம் கடனாக வாங்கினேன். அந்த கடன் பெற்றதற்கான ஆவணப் பூர்வமான ஆதாரம் எதுவுமில்லை. அசல் வழக்கு எண் 41/2015 என்ற வழக்கை பாகப்பிரிவினை கேட்டு நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் தாக்கல் செய்யவில்லை என்னுடைய நாத்தனார் தாக்கல் செய்தார். எனக்கு நீதிமன்றம் கட்டணம் செலுத்துவதற்கான வசதி உள்ளது என்றும்

எனக்கு வங்கி கணக்கு உள்ளது என்றும் அதை தவிர பொன் நகைகளும் என் வசம் உள்ளது என்றும் எனக்கு வசதி இருந்த போதிலும் நான் நீதிமன்ற கட்டணத்தை செலுத்த மறுக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

(Sd/- Deepthi Arivunithi, M.L.,)
Principal District Judge,
Kancheepuram.